அம்பத்தூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்

O.S.No. 228/2017

இந்த நீதிமன்றத்து உதவியாளர் செல்வி. உ. தாரணி என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/ பிரதிவாதி தரப்பின் சாட்சியின் வாக்குமூலம் 1873 ம் ஆண்டின் 10 வது சட்டத்தில் வகை முறைகளுக்கு உட்பட்டு 2025 ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 17–ம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

வா.சா.1 17.09.2025

பெயர் சசிகுமார் தந்தை/ கணவர் பெயர்

தொழில் வயது

இனம் சமயம்

கிராமம் வட்டம்

<u>முதல் விசாரணை தொடர்ச்சி</u>:–

1. G.O.No.456 dated 09.11.2007 True copy வா.சா.ஆ 1

2. Proceedings of the HR & CE letter True copy வா.சா.ஆ 2

3. Demand Register Regarding Original Tenant extract compared with original வா.சா.ஆ 3

4. Register of Property extract compared with original வா.சா.ஆ 4

5. Notice to 1st Defendant hand copy with Postal recepit Original வா.சா.ஆ 5

6. Notice to 2nd Defendant hand copy with Postal recepit Original வா.சா.ஆ 6

7. compliant to Inspector of Police Korattur hand copy with Postal recepit Original வா.சா.ஆ 7

8. Photo with CD and Bill வா.சா.ஆ 8

<u>குறுக்கு விசாரணை</u> :–

1. இந்த வழக்கு எதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் வாடகைக்கு இருப்பவர் சரியாக வாடகை செலுத்தவில்லை என்பதால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. வழக்கிற்கான சொத்து முகவரி எண் 53 வடக்கு மாடதெரு ஆகும். முதல் முறை யாருக்குமேற்படி சொத்து வாடகைக்கு விடப்பட்டது என்றால் Original Tenant இவ்வழக்கில் 1ம் பிரதிவாதி லலிதா ஆவார். லலிதா உடன் பதிவு செய்யப்பட்ட குத்தகை பத்திரம் செய்தோம் என்றாலும் அதனை நீதிமன்றத்தில் தாக்கல்செய்துள்ளேனா என்றால் அந்த விவரம் பற்றி எனக்கு தெரியாது. மேற்படி குத்தகை பத்திரத்தில் அடிமனை மேல்மனை மட்டும் தான் பயன்படுத்த வேண்டும் என்று இருக்கும் கட்டிடத்தில் மேலும் புதிதாக எந்த கட்டிடமும் எழுப்பகூடாது என்றும் ஒப்பந்தபத்திரத்தில் உள்ளது என்றால் சரிதான்.

2. பிரதிவாதி வழக்கு சொத்தில் கட்டடிடத்தை இடித்து விட்டு புதிதாக கட்டிடம் கட்டியது சம்மந்தமாக நான் புகார் எதுவும் கொடுத்துள்ளேனா என்றால் கொடுத்துள்ளேன். 1ம் பிரதிவாதி கட்டிடம் கட்டுவதற்கு 2ம் பிரதிவாதி கார்பரேசன் எந்த அனுமதியும் கொடுக்கவில்லை என்றால் எனக்கு தெரியாது. இந்த வழக்கு எனக்கும் 1ம் பிரதிவாதிக்கும் மட்டும் இடையே தாக்கல் செய்திருக்க வேண்டும் என்றால் சரியல்ல. இவ்வழக்கில் 2ம் பிரதிவாதி தேவையற்ற தரப்பினர் என்றாலும் 2ம் பிரதிவாதிக்கு எதிராக கோரியுள்ள பரிகாரம் தள்ளுபடி செய்யவேண்டும் என்றாலும் சரியல்ல.

இத்துடன் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது, மறு விசாரணை இல்லை.